செ.வெ.எண்.01 நாள்.01.11.2017.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், கொடுமுடியாறு நீர்த் தேக்கத்திலிருந்து மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பிசான சாகுபடிக்காக தண்ணீரினை திறந்து வைத்தார்.

--------

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், கொடுமுடியாறு நீர்த் தேக்கத்திலிருந்து பிசான சாகுபடிக்காக தண்ணீர் திறப்பு நிகழ்ச்சி இன்று (01.11.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பிசான சாகுபடிக்கு தண்ணீரினை திறந்து வைத்தார்.

பின்னர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

நாங்குநேரி வட்டம், கொடுமுடியாறு நீர்தேக்கத்தின் பாசன பரப்பு ஆயக்கட்டான வள்ளியூரான்கல், படலையார்கால், வடமலையான்கால் மற்றும் ஆத்துக்கால் ஆகியவற்றின் மூலம் பாசனம் பெறும். நேரடி பாசனத்தில் படலையார்கால் 209.13 ஏக்கரும், தளவாய்புரம் அணைக்கட்டு தன்கால் பாசனம் 31.12 ஏக்கரும், வடமலையான்கால் 696.65 ஏக்கரும் ஆக மொத்தம் 936.90 ஏக்கரும், மறைமுக பாசனத்தில் படலையார்கால் 1014.12 ஏக்கரும், வள்ளியூரான்கால் 1294.57 ஏக்கரும், வடமலையான்கால் 2535.32 ஏக்கரும் ஆக மொத்தம் 4844.01 ஏக்கரும் என மொத்தம் 5780.91 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறும். நீர் தேக்கத்திலிருந்து (இன்று) 01.11.2017 முதல் 31.03.2018 வரை நாள் ஒன்றுக்கு வினாடிக்கு வள்ளியூரான்கால் ஷட்டர் மூலம் 30 கன அடியும், மற்றும் படலையார்கால் ஷட்டர் மூலம் 30 கன அடியும் ஆக மொத்தம் 60 கன அடிக்கு மிகாமல் 2017–2018ம் ஆண்டு பிசான சாகுபடிக்கு நீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படும். எதிர்வரும் நாட்களில் வடகிழக்கு பருவ மழையினால் அணையில் நீர்வரத்து அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர் வரும் நாட்களில் பருவ மழை பொய்த்து எதிர்பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்க பெறவில்லை என்றால் இருக்கும் நீரினை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும். எனவே, விவசாயிகள், பொதுமக்கள் நீரினை சிக்கனமாகவும், நீர் விநியோகப் பணியில் பொதுப்பணித் துறையினருக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென தெரிவித்தார்.

கொடுமுடியாறு நீர்தேக்கத்தின் மூலம் திருக்குறுங்குடி, ஏர்வாடி, வடக்கு வள்ளியூர், தெற்கு வள்ளியூர், தளபதிசமுத்திரம், ஆனைகுளம், அச்சம்பாடு, தெற்குகள்ளிகுளம், சமூகரெங்கபுரம், மகிலடி, நம்பித்தலைவன் பட்டையம், இராஜக்கள்மங்கலம், தேரைக்குளம், கும்பிக்குளம், ஆலங்கிணறு திருமலாபுரம், சௌந்திரபாண்டியபுரம், இராதாபுரம் ஆகிய 17 கிராமங்களை சேர்ந்த 44 குளங்கள் பயன்பெறுகின்றன.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை, பொதுப்பணித் துறை சிற்றாறு வடிநிலக் கோட்ட கண்காணிப்பு பொறியாளர் திரு.ரவி, செயற்பொறியாளர் திரு.ஜெயபாலன், உதவி செயற்பொறியாளர் திரு.மதன சுதாகரன், உதவி பொறியாளர் திரு.மூர்த்தி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.செந்தில்வேல் முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, நாங்குநேரி வட்டாட்சியர் திரு.ஆதிநாராயணன், முக்கிய பிரமுகர்கள் திரு.சேர்மபாண்டி, திரு.ஆறுமுகம், திரு.அழகானந்தம், திரு.அந்தோணி அமல்ராஜா, திரு.விஜயகுமார், திரு.ஜெயராமன், திரு.செல்வராஜ், திரு.தவசிமுத்து மற்றும் விவசாயிகள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி